# இளங்கோவடிகள் சுட்டும் சமயங்களில் தமிழ்

திருமதி சி. தேவிகா[1] & முனைவர் க. மகேஸ்வரி[2]

[1]முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அறிவியல் மற்றும் கலையியல் புலம் .

உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை, மேலாண்மையியல் புலம்

எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம்

காட்டாங்குளத்தூர், 603 203. cdevika083@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

ழ - கரத்தால் உயர்ந்து நிற்கும் தமிழ் மொழியைக் கற்ற மேலைநாட்டு அறிஞர் ஜீ.யு.போப் அவர்கள் தன்னைத் தமிழ் மாணவன் எனக் கல்லறையில் பொறிக்கச்செய்த தமிழ,; தனிநாயகம் அடிகளாரை பக்தியின் மொழி எனக் கூறச் செய்த தமிழ், இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர் எனப் பாரதிதாசனை பாடச் செய்த தமிழ், மொழிஞாயிறு பாவாணர் போன்றோர்களால் செம்மொழிகளில் முதன்மையானது என அடையாளப்படுத்தப்பட்டத் தமிழில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய இளங்கோவடிகள் சுட்டும் பல சமயங்களில் காணப்படும் தமிழின் சிறப்புகளைக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சமயம்**

சமயம் என்பதற்கு விக்கிபீடியா இணைய அகராதி ;சமயம்அல்லது மதம் - மனிதன் கடவுள் நிலையை அடைவதற்கான வழி என்றும் நம்பிக்கை தொடர்பான செயற்பாடுகளையும் சிறிய வழிபாடு முதல் பெரிய வழிபாடுவரை சடங்குகள் பற்றியும் கூறுகிறது. மேலும் உலகில் சுமார் 5000-க்கும் மேற்பட்ட மதங்கள் இருப்பதாகக் கூறுவர். அதில் இளங்கோவடிகள் சைவம், வைணவம், பௌத்தம், சமணம் என்றும் நான்குவகை சமயங்களைப் பற்றி கூறுகிறார்.

இச்சமய நிலைபாட்டினை ஆசிரியர் சார்ந்த சமயம், கதை மாந்தர் சார்ந்த சமயம், கதை நிகழ்ச்சிகளில் சமயம் எனப் பிரிக்கலாம். சமயங்கள் வழி தமிழ் இளங்கோவடிகள் பயன்படுத்திய விதம் பற்றி கூறப்படுகிறது. தமிழ் மொழி இயல், இசை, நாடகம் எனமுத்தமிழாகவும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்திலக்கணமாகவும் பயணித்து வருவதை புலவர்கள் முதல் தமிழ் கற்றோர் யாவரும் கூறுவர்.

**இவளகோடிகளும் சமணமும்**

சமண சமயக் கொள்கைகள் பிராகிருத மொழியில் பரப்பப்பட்ருந்தாலும் ஆசிரியர் இளங்கோவடிகள் தமிழில் காப்பியம் படைத்திருப்பது தமிழின் வளர்ச்சியே! இச்சிலம்பில் மதுரைக் காண்டம், காடுகாண் காதையில் சமண சமய அருகதேவனை கூறும் போது மூன்று முழுநிலவு போன்றவன் சந்திராதித்யம், நித்தியவினோதம், சகலபாசனம் எனும் முக்குடைகளின் கீழ் என்றும் ஞாயிறு போல ஒளியுடையவன் என்றும் பிறசமயங்கள் கூறுமிடங்களில் கூறாமால் சமணசமயம்

குறித்து கூறுமிடத்தில் மட்டும் தனிச் சிறப்பாக கூறியிருப்பதாலும் அருகனின் சிறப்புகளை தமிழ் இலக்கியம் வளர இளங்கோவடிகள் கூறியிருப்பது சமணசமயத்தில் தமிழ் வளர்ச்சி எனலாம்.

'திங்கள்மூன் றடுக்கிய திருமுக் குடைக்கீழ்ச்
செங்கதிகர் ஞாயிற்றுத் தகழொளி சிறந்து,
கோதைதாழ் பிண்டிக் கொழுநிழல் இருந்த
ஆதிஇல் தோற்றத்து அறிவனை வணங்கிக்.. (காடுகாண் 1-4)

நாடுகாண் காதையிலும் சமண சமயத்தவரின் சிலாவட்டம் என்ற மேடையை கோவலன் கண்ணகி இருவரும் வணங்கினர் என்கிறார். இளங்கோவடிகள் தமிழ்மொழி இலக்கிய வளர்ச்சிக்கு சமணசமயத்தின் புதிய சொல்லாக்கப் பங்களிப்பைப் பல்வேறு இடங்களில் கூறியுள்ளார்.

'உலகு நோம்பிகள் ஒருங்குடன் இட்ட
இலகுஒளிச் சிலாதலம் தொழுது, வலம் கொண்டு ' (நாடுகாண் 24-25)

தமிழ்மொழிக்கு புதிய சொல்லாக்கம் படைக்க பல புதிய சொற்களை மேற்கூரிய பாடல் வழி இளங்கோ படைத்துள்ளார் எனலாம்.

பௌத்தம்

கி.மு.5-ஆம் நூற்றாண்டில் பண்டைய மகதநாட்டில் (பீகார்) தோன்றியதாகக் கூறப்படும் பௌத்தம் இயற்கையின் உண்மையை எதார்த்த நிலையை முழுமனித ஆற்றலைப் பெருக்க உதவுவது கனவுகள். அவை நினைவாகும் என்பன போன்ற மதத் தத்துவங்களை மானிடத்தின் எதார்த்தங்களைத் தமிழில் இளங்கோவடிகள் அடைக்கலக் காதையில் கூறியுள்ளார்.

'அணிதிகிழ் போரி அறவோன் - தம்முன்
மணிமே கலையை மாதவி அளிப்பவும்,
நனவுபோல நள்ளிருள் யாமத்துக்
கனவு கண்டேன்; கடிதீங்கு உறும்' என- (அடைக்கலக் 103-105)

இளங்கோவடிகள் ஈண்டு புத்தமதம் புத்தரின் விகாரங்கள் ஏழு ம் புகாரில் இருந்தன என்று உரையாசிரியர்கள் கூறியுள்ளனர் என்பர்.

இக்காதையில் மேற்கூறிய பாடல் வரிகள் வழியாக மணிமேகலை, மாதவி பௌத்தம் சார்ந்த சமயக் கொள்கைகள் அறிய முடிகிறது.

**சைவ சமயம்**

சமயம் என்பது மனித இனக்குழுவின் ஒட்டுமொத்த நம்பிக்கை, சடங்கு, உணர்வு, செயல்நிலை போன்ற கூறுகளில் அடிப்படையில் இறைவனை மையமாக்கியது ஒரு பரந்தநிலை. அவற்றில் தமிழ் இலக்கியத்தில் இளங்கோவடிகள் சைவ சமயத்தில் சிவபெருமானைப் பற்றிக் கூறும் போது சிலம்பில் ஐந்தெழுத்து மந்திரத்தைப் பற்றிக் கூறுகிறார். கோவலன் கண்ணகியைப் பாராட்டும் போதும், சிபெருமானோ வான்பிறை நிலவைச்சூடி காட்சித்தருகிறார் எனினும் அப்பிறை நிலவே உன்னோடு

பிறந்தது போல் உன்முகம் காட்சியளிக்கிறது என கூறியிருப்பதும் நுதல் நாட்டத் திறையோன், பிறைமுடி கண்ணி பொறை யோன், பிறவாயாக்கை பெரியோன் எனக் கூறியிருப்பதும் சேரன் செங்குட்டுவன் வடபுல ஆரிய அரசன் மீது படையெடுக்கச் சென்ற போது சிவபெருமானை வணங்கியே சென்றான் என இளங்கோவடிகள் கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தேவர்களுக்கெல்லாம் தேவனாகிய சிவபெருமான் சுடுகாட்டில் திரிபுரங்களை எரிக்க ஆடிய கொடுகொட்டி என்னும் ஆடலை தேவர்கள்கான ஆடினார். அதே போல் அவ்வாட்டத்தை மாதவியும் ஆடினால் என்பதும் நான்முகம் காணுமாறு பாரதி ஆடிய பாண்டுரங்கன் கூத்தினை இளங்கோவடிகள் கூறியிருப்பதும் இவை மட்டும் அல்லாது சைவ சமயத்தின் கதைகளான சிவன் மதியினை சூடியமை, நஞ்சுண்டு கண்டம் கருத்தமை போன்ற கருத்துக்கள் வேட்டுவரியில் குறிப்பிட்டுயிருப்பது குறிப்பிடத்தக்கது.

'மதியின் வெண்தோடு சூடுஞ் சென்னி,
நுதல்கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்
(வேட்டுவவரி - 54,55)

விண்ணோர் அமுது உண்டும் சாவ, ஓருவரும
உண்ணாத நஞ்ச உண்டு, ---- ----- -----
(வேட்டுவவரி - 21)

மறைமுது முதல்வன் பின்னர் மேய
பொறைஉயர் பொதியிற் பொருப்பன் ---- ---- ----
(வேட்டுவவரி -23)

போன்றவற்றை சான்றாக கூறலாம்.

**வைணவம்**

திருமாலைப் பற்றி தொல்காப்பியம், மாயோன் மேய காடுறை உலகமும் எனக் கூறியிருப்பதும் வைணவ சமயத்தின் தலைவர் திருமால் என ஆழ்வார்களால் புகழப்பெற்றிருப்பதும் ஆகிய சிறப்பிற்குரிய அரங்கநாதருக்கு ஸ்ரீரங்கத்தில் பெரி ய கோயில் உண்டு என்று சிலப்பதிகாரம் கூறியிருக்கிறது. ஆய்ச்சியர் குரவையில் , வைணவ சமயக் கருத்துக்களாக வாசுகி பாம்பினை கயிராக கொண்டு பாற்கடலை கடைந்த செய்தி, திருமாலின் புல்லாங்குழல் இசைச் செய்தி, ஆம்பலால் ஆகிய குழலிலிருந்து வரும் இசை, முல்லையால் குழலிலிருந்து வரும் இசை, மாங்காட்டு மறையவன் திருமாலைப் பற்றிக் கூறும் போது திருமால் திருவரங்கத்தில் கிடந்தவண்ணக் கோலமும் திருவேங்கடத்தில் நின்றவண்ணக் கோலமும் இருப்பதாக கூறுகிறார்.

அதுமட்டுமல்லாமல் மாயவன் ஆடிய குடம் என்னும் கூத்தினையும், அல்லியம் என்னும் கூத்தினையும் மாதவி ஆடினாள் என்பதில் இருந்தும் திருமாலின் திருத்தலங்களான வஞ்சி நகரத்து ஆடகமாடம், மதுரை அழகர் மலை, காவிரி பூம்பட்டினம், திருமாலிருஞ்சோலை, திருவரங்கம், திருவேங்கடம் போன்ற கோயில்களைப் பற்றியும் மாதவியின் மகள் ஐயை திருமாலை; வழிபடும் மரபினை சார்ந்தவள்

எனக் குறிப்பிடுவதும் தமிழ் இலக்கியத்திற்கு இளங்கோ வைணவ சமயத்தின் பங்களிப்பினைக் கூறியிருக்கிறார் எனலாம்.

"வேல்நெடுங்கண் பிஞ்ஞையோடு ஆடிய
குரவை ஆடுதும் யாம் என்றாள்"(ஆ.குரவை. 5)

சைவம், வைணவம், பௌத்தம் போலவே சிறிய வழிபாடுகளின் வழியாகவும் இளங்கோவடிகள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கானப் பங்களிப்பினை வழங்கியுள்ளார்.

**இயற்கை வழிபாடு**

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம், தமிழன்னையின் காலணியாம் செம்பொன் சிலம்பு எனச் சான்றோர்களாலும் பெரும் புலவர்களாலும் போற்றப்படும் சிலம்பில், ஆதிகாலம் முதல் இயற்கை வழிபாடு தமிழர் சமய வழிபாட்டு மரபு என்பதை சிந்தியல் வெண்பாவில் காப்பியத் தொடக்கமாக அடிகள்

'திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்'
ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!
மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்
பூம்புகார் போற்றுதும்! பூம்புகார் போற்றுதும்!

என மங்கல வாழ்த்தாக இயற்கை வழிபாட்டை கூறியுள்ள இளங்கோவடிகள் நிலத்தை நான்குவகைப்படுத்தி குறிஞ்சி-முருகன், முல்லை-திருமாலை, மருதம்-இந்திரன், நெய்தல்-வருணன், பாலை-கொற்றவை என்று நிலத்தையும் நிலம் சார் தெய்வத்தையும் நெறிப்படுத்தி பாடியிருப்பது இலக்கிய மதம் சார் தமிழ் வளர்ச்சியாக அறியமுடிகிறது.

**சிறுதெய்வ வழிபாடு**

இளங்கோவடிகள் காலத்தில் கடல் தெய்வம், மதுராபுரி தெய்வம், இயக்கி, மாக்கடல் தெய்வம், ஐயை, வனசாளின் சாத்தன் பலதேவன், பூங்கண், பதிணென்கணங்கள், தீக்கடவுள், நாளங்காடிப் பூதம், பாசண்ட சாத்தன், பொய்யுரைத்தால் அறைந்துண்னும் பூதம் போன்றவை அக்காலத்தில் இருந்ததாக இளங்கோவடிகள் கூறியுள்ளமை குறிப்பிடதக்கது.

**பத்தினி வழிபாடு**

சேரன் செங்குட்டுவனால் சாதாரண குடிமக்களில் ஒருத்தியாக பிறந்த கண்ணகி உலக வழிபாட்டிற்குரியவளாக மாற்றப்பட்டுள்ளாள். நடுகல் வழிபாடும் இதனையே உணர்த்துகிறது. இன்று மாரியம்மன் வழிபாடாக கருதப்படும் கோயில் வழிபாட்டு முறைகள் கண்ணகி வழிபாட்டு முறைகளே என்று ஆய்வாளர்களால் கூறப்படுகிறது. இளங்கோவடிகளும் இதனை 'உரைசால் பத்தியை உயர்ந்தோர் ஏத்தலும் என்பது காப்பியக் கூறுகளில் ஒன்றாக முதன்மைப்படுத்தியுள்ளார்' என்பர்.

**கொற்றவை வழிபாடு**

முருகன் வழிபாடு, கொற்றவை வழிபாடு போன்றவற்றை கூறும் இளங்கோவடிகள் அந்தரி,

சங்கரி, கவுரி, அமரி, ஐயை , சூலி, நீலி, ஆளுடையாள், கண்ணுதல் பாகம், விழிநுதல் குமாரி, பாய்கலைப்பாவை என்றெல்லாம உவமைப்படுத்தி கொற்றவைக்கு பலியிடுதல் போன்றவற்றையும் மதுரையில் கோயில் கொற்றவைக்கு இருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கோவலனை முருகன் அழகிற்கு இணையாக மங்கல வாழ்த்து பாடலில் பாடியுள்ளார்.

'கண்டேத்தும் செவ்வேளென்று இசைபோக்கி காதலாற்
கொண்டடேத்தும் கிழமையோன் கோவலன்' (ம.வா.பாடல்- 38-39).

சமயக்கதை மாந்தர்கள் வழியாக தமிழ்வளர்ச்சியை இளங்கோவடிகள் கூறுகையில் கோவலன் என்னும் சாவல நோன்பி வழியாக வள்ளுவர்கூறும் முன்வினையை ஊழ்வினையாகக் குறிப்பிடுவதும் கவுந்தியடிகள் என்னும் சமணப் பெரியார் வழியாக கோவலனுக்கு உலக அறம் உணர்த்துவதும் மாதவி வழியாக 11 - ஆடல் நிலைகளையும் இவ்வாறு ஒவ்வொரு கதைபாத்திரமும் முத்தமிழ் வளர்ச்சிக்கு சமயங்கள்வழி தமிழ் மொழிஇலக்கியத்தை வளர்த்து புதமைபடுத்தியுள்ளார் அடிகள் என்பதைக் காண முடிகிறது.

மது.ச.விமலானந்தம் அவர்கள் கவுந்தியடிகளைச் சமண சமயக் கருத்துக்களைப் பரப்பவே இளங்கோவடிகள் படைத்துள்ளார் என்றும் மேலும் வைணவ சமயக் கருத்துக்களைப் பரப்பவே மாங்காட்டு மறையோனைப் படைத்துள்ளார் எனவும் கூறியுள்ளார்.

**முடிவுரை**

Ø தமிழ் மொழி இலக்கியத்திற்கு நாடுகாண்காதை மூலம் சமண மதக் கருத்துக்களை, கொள்கைளைப் பற்றிக்கூறி இளங்கோவடிகள்
இயற்தமிழ் வளர்த்துள்ளார்.

Ø பௌத்த மதக் கதாபாத்திரம் மாதவி வழியாக இசைத்தமிழ் மற்றும் நாடகத்தமிழ் வளர்ச்சியைக் கூறியுள்ளார்.

Ø சைவ சமயக்கருத்துகளை வலியுறுத்த கண்ணகியின் வருணனையை சிவபெருமானின் அழகியல் கோலம் வழியாகக் இயற்றமிழ் வளர்த்துள்ளார்.

Ø வைணவ சமயக் கருத்துக்களை மாங்காட்டு மறையோன் வழி கூறி இயற்றமிழ் வளர்த்துள்ளார்

Ø சிறுதெய்வ வழிபாடு, கொற்றவை வழிபாடு, பத்தினி வழிபாடுகள் மூலம் இயற்றமிழ் நிலைகலைக் காணமுடிகிறது.

மேற்கூறியவாறு தமிழ்மொழியில் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் வளர்க்க பல சமயங்களை பயன்படுததியுள்ளார் எனக்கூறுவது சாலச்சிறந்தது எனலாம்.

**பார்வை நூல்கள்**

1. சிலப்பதிகாரம்
உரையாசிரியர் - நா.மு. வேங்கடசாமி நாட்டார்.
பதிப்பு - ராமையா பதிப்பகம்
4.சாந்தி அடுக்கம்

3இஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெருஇ
ராயப்பேட்டைஇசென்னை-600 014.
9 ஆம் பதிப்பு - 2018

2. சிலப்பதிகாரம்

உரையாசிரியர் - புலியூர்க்கேசிகன்
பதிப்பு - சாரதா பதிப்பகம்
4.சாந்தி அடுக்கம்
ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெருஇ
ராயப்பேட்டைஇசென்னை-600 014.

பதிப்பு -10ஆம் பதிப்பு 2022